திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் லாரி தொழிலாளர்களுக்கு இறந்துவிட்ட பிறகு அவர்களுக்குப் பாதுகாப்பு தொகையாகக் கொடுக்கப்படுகிற ரூபாய் 1,000ஐ ரூபாய் 5,000 ஆக உயர்த்திக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். இது முக்கியமான கோரிக்கை. இதை அரசு கவனிக்குமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, இந்த மாதிரி விபத்தில் இறக்கிற டிரைவர்கள், கிளீனர்கள் ஆகியவர்களுக்கு ஏற்கெனவே இருக்கிற சட்டப்படி, வாகனச் சட்டம் 110. அ. பிரிவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. விபத்து நேர்ந்து இறந்துவிட்டால், அவர்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அந்த நட்ட ஈட்டைப் பெறுவதற்கு அரசு வழிவகை செய்திருக்கிறது.

கன்னியாகுமரி-திருச்செந்தூர் கடற்கரைச்சாலை.

*வினா எண். 694—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியிலிருந்து திருச்செந்தூர் வரை உள்ள கடற்கரை சாலையை (Coastal Road) விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அப் பணி மேற்கொள்ளப்படும்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. ஜான் வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரைச் சாலை, தேசீய சாலை, நெடுஞ்சாலை பக்கத்தில் இருக்கிற மண்ணை வெட்டி எடுக்கிறபோது, அவைகளுக்கு அருகாமையில் உள்ள சிறு விவசாயிகளுடைய நிலங்களை எடுத்துக் கொள்கிறார்கள். குறைந்தது 4 சென்ட் நிலத்தை எடுத்துக் கொள்கிற நிலை இருக்கிறது. அந்தச் சிறிய விவசாயிகள் பயன் அடையக் கூடிய வகையில் அவர்களதுச் சிறு நிலத்தையும் அரசே எடுத்துக் கொண்டு அவர்களுக்கு நட்ட ஈடு வழங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 17]

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. இரா. அமிர்தராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர்-கன்னியாகுமரி ஆகிய இந்த இடங்கள் இரண்டும மிகவும் புகழ்வாய்ந்த இடமாகவும், புண்ணிய ஸ்தலங்களாகவும் கருதப்பட்டு வருகிறது. இந்த இடங்களுக்கு தினசரி நூற்றுக் கணக்கானவர்கள் சுற்றுலா பேருந்து மூலமாகவும் பல்லவன் விரைவு பேருந்துகள் மூலமாகவும் வந்து போகிறார்கள், ஆனால் இந்த பேருந்துகள் செல்லக்கூடிய சாலைகள் மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாகவும், மேடு பள்ளம் ஆகவும் இருக்கிறது. இதை நிவர்த்தி செய்ய சாலையை விரிவு படுத்தும் வகையில் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் உணவு உற்பத்திக்கு சிறப்புத் திட்டம்.

*வினா எண். 695—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உணவு உற்பத்தியை மேலும் அதிகப்படுத்தும் சிறப்புத் திட்டம் ஏதும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) ஒரு விவர அறிக்கை † அவையின் முன்வைக்கப்பட்டுள்ளது

† 263—ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.